பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

மங்கையரின் அழகுக்கு
மேலும் அழகூட்டும்
தங்க நகைகளை 22கரட்டில்
பெற்றிட இன்றே நாடுங்கள்.
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1603)

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 08 புதன்கிழமை 21-03-2001 தொலைபேசி: 3378 ஒலி: 92

# ★ நேரக்கட்டுப்பாடு, கடல் எல்லை வரையறை யாழ். மீனவர் பிரச்சினை ஆராய விரைவில் மாநாடு!!

## அமைச்சர் மஹிந்தஇணக்கம்

(நமது நிருபர்)

**யாழ் குடாநாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள மீன்பிடித்தடை, மீன்பிடி நேரம், மீன்பிடித் தூரம் தொடர்பாக யாழ்- மீனவர்கள் பிரச்சினைகளையும், சிரமங்களையும் அனுபவித்து வருகின்றனர் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உயர் அதிகாரிகள் பங்கு கொள்ளும் கூட்டம் ஒன்றை உடனடியாகக் கூட்டி தீர்வு காண்பதாக மீன்பிடி அமைச்சர் மஹிந்த இராஜபக்ஷ யாழ்-மாவட்ட எம்.பிக்களிடம் உறுதியளித்துள்ளார்.**

யாழ். குடாநாட்டு மீன் பிடித் தொழிலாளர்கள் நாளாந்தம் பல பிரச்சினைகளை எதிர் நோக்கியவண்ணம் இருப்பதால் அவர்கள் தொழில்கள் மேற்கொள்ள முடியாதுள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். தவராஜா, மாவை சேனாதிராசா, பொன் செல்வராசா ஆகியோர் மீன்பிடி சம்பந்தமான பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் எடுத்துக் கூறினர்: இது குறித்து இராணுவ. கடற்படை உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளும் வகையில் கூட்டத்தை கூட்டி ஆராயுமாறு விடுத்த வேண்டு கோளுக்கு அமைவாக மிக விரைவில் மாநாட்டினைக் கூட்டுவதற்கு மீன்பிடி அமைச்சர் மஹிந்த இராஜபக்ஷ இணங்கியுள்ளார்.

யுத்த நிறுத்தம் தற்போது அமுலில் உள்ளபடியால் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## லிண்டாவின் பயணம்ரத்து

[கொழும்பு]

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் லிண்டாடபீல்டின் லண்டன் விஜயம் இறுதி நேரத்தில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திடீர் விஜயம் ஒத்திவைப்பு தொடர்பாக பிரித்தானிய அரச தூதுவர் லிண்டாடபீல்ட்டுக்கு இந்த விஜயம் குறித்த திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## கச்சதீவு செல்வதற்கு கடற்படை அனுமதி

### மதனராஜா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பல வருடங்களாகத் தடைபட்டிருந்த கச்சதீவுக்கு இம்முறை செல்வதற்குக் கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். இது தொடர்பாக ஈ.பி டி பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான என். மதனராஜா மற்றும் ஈ பி. டி பியின் பிரதிநிதி நெப்போலியன் ஆகியோர் யாழ் மாவட்ட் உதவிக் கடற்படைத் தளபதி தர்மசிறி வர்த்தனாவுடன் நடத்திய பேச்சைத் தொடர்ந்தே இவ்வனுமதி வழங்கப்பட்டுள்ளது.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## யாழ். மாநகர சபையின் குடும்பநல சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்க நீதிபதி பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையின்சுகாதாரப்பகுதியில் கடந்த எட்டு வருடங்களாகக் கடமையாற்றும் குடும்பநல சேவையாளர்களின் சம்பளம் வழங்கப் படாமைகுறித்து நேற்றுயாழ் நீதிமன்றத்தில் நீதவான்இ. த. விக்கினராஜா முன்னிலையில் ஆராயப்பட்டது.

சம்பளம் வழங்கப் படாமல் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த குடும்பநல சேவையாளருக்கு சம்பளத்தை உடன் வழங்கு மாறுகேட்டுக்கொண்டதற்கு மாநகரசபை ஆணையாளர் இராசா தணிகாசலம் சம்மதம் தெரிவித்தார்.

யாழ் நீதவானின் உத்தியோகபூர்வஅறையில் நீதிபதியின் முன்னிலையில் இடம் பெற்ற சமரசமுயற்சி மாநாட்டில்வைத்தியகலாநிதிஇ.தெய்வேந்திரன், யாழ் மாநகர சபை ஆணையாளர் இராசா தணிகாசலம், பிரதி மேயர் செல்லன் கந்தையன், சுகாதாரப் பகுதி நிர்வாக உத்தியோகத்தர் இ. இரட்ணசிங்கம் குடும்பநல சேவையாளர்களின் செயற்பாட்டுக் குழுப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சமாதானம் ஏற்படும்காலம் நெருங்கி வருகிறது

### அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

தமிழ் சகோதரர்களுடன் சிங்களசகோதரர்கள் போரிட்டுக் கொண்டிருக்கும் யுத்தத்திற்கு முடிவுகட்ட வேண்டுமென்று நகர அபிவிருத்தி நிர்மாணத்துறை அமைச்சர் மங்களசமரவீர தெரிவித்துள்ளார்.

வரவுசெலவுத்திட்ட இரண்டாவதுவாசிப்பு விவாதத்தின் மீது உரையாற்றிய அவர் மேலும்தெரிவிக்கையில்.

சமாதானம் ஏற்படும் காலம் நெருங்கி வந்துள்ளது இத்தருணத்தில் நாமஅனைவரும் ஒன்றுபட்டு தீர்வுகாணப்படவேண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்யார்? அவர் இலங்கையர்தானே;

→ 8ஆம் பக்கம் பார்க்க

## 15 விமானங்களை புலிகள் சுட்டு வீழ்த்தினர்

கடந்த ஆண்டில்விடுதலைப் புலிகளால் சுமார் 15 விமானங்களைச்சுட்டுவீழ்த்தியுள்ளதால் விமானப்படையைபலப்படுத்துவதற்காக 50 நவீனரக விமானங்களை அரசு கொள்வனவு செய்துள்ளது. என எரிபொருள் மின்சக்தி பிரதி அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். [ம]

## தடைச்சட்டம் பிரபுக்கள் சபையில் சமர்ப்பிக்கப் படவில்லை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை பிரித்தானியாவில் தடை செய்வதற்கான பிரேரணை குறிப்பிட்டபடிகடந்த திங்கட்கிழமை பிரபுக்கள் சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை. எதிர் வரும் 27ம் திகதியே அங்கு சமர்ப்பிக்கப் படுமென பிரித்தானியாஅரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பு நேற்று கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

27ம் திகதி பிரபுக்கள் சபையில் சமர்ப்பிக்கப் படும் இப்பிரேரணையை அன்றைய

→ 8ஆம் பக்கம் பார்க்க

## எந்தவிதக் குறையுமின்றி புலிகள் எம்மைப் பராமரித்து வந்தனர்

### விடுவிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிப்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகள் சிங்கள மக்களை அழிப்பவர்களல்லர். அவர்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே போராடுவதாக அண்மையில் புலிகளால் விடுதலை செய்யப்பட்ட சிங்கள விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட அனுராதபுரம் பதவியாவைச்

→ 8ஆம் பக்கம் பார்க்க)

## இணுவில் சிறுமி ஜேர்மனியில் மரணம்

(லண்டன்)

ஜேர்மனியில் வசிக்கும் யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த பதின்மூன்று வயதுச் சிறுமி நீர்த்தடாகமொன்றில் நீந்திக் குளித்துக்கொண்டிருந்த போது நீரில் மூழ்கி பரிதா

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ஆப்கான்புத்தர்சிலைஉடைப்புக்கும் விடுதலைபுலிகளுக்கும்தொடர்புண்டு

### கொழும்பு ஆங்கில நாளேட்டில் செய்தி

(கொழும்பு)

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியாளர்களால் பௌத்தசிலைகள் உடைக்கப்பட்டதற்கும்தமிழீழவிடுலைப்புலிகளுக்கும் தொடர்புண்டென கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலநாளேடு ஒன்றுசெய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் சேக்கிள்அமைப்பினால் நடத்தப்படும் சேக்கிள்ஸ் டையஸ்என்ற இலத்திரனியல் பத்திரிகையில் தலிபான்கள் புத்தர் சிலையை உடைத்தற்கு ஆதரவுதெரிவிக்கப் பட்டுள்ளது.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ஒரே குடும்பத்தில் ஐவர் பலி

மதவாச்சி மிகுந்தலை வீதியில் இடம்பெற்ற செங்குசுவானும்,கனரகவாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதியதால்ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பெண்கள் பலியானார்கள்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம அடைக்கலநாதனின் மனைவியின் சகோதரியும், பிள்ளைகளுமே இவ்வாறு பரிதாபகரமாக மரணமாகியவர்களாவர். [ம

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சொனி 14'' ரீவி, சொனி டெக், நஷனல் பன சொனி டபிள் ஸ்பீக்கர் றேடியோ, ஆண்களுக்குரிய ஏசியா சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு- இன்று மட்டும் பி.ப 2 மணிக்குப் பின்னர் 391, இராசாவின் தோட்டம் வீதி, (வைரவர் கோயில் ஒழுங்கை) யாழ்ப்பாணம் (2649)

### சேவை

சுயாழினி தொலைத் தொடர்பகத்தில் நேரடி தொலைத்தொடர்பு இணைப்புக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடனுக்குடன் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் 233, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (கி-1624)

### குருபூசை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் குருபூசை எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டபத்தில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் பி.ப.3 மணிக்கு இடம் பெறவுள்ளது. (உ)

# சமாதான முன்னெடுப்புக்களுக்கு இடையூறு விளைவிக்க இயலாது

(கொழும்பு)

நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் மேற்கொண்டு வரும், இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளை எந்தச் சக்தியாலும் குழப்ப முடியாதென பெயர் குறிப்பிட விரும்பாத கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவர் கூறியுள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு தகவல் வழங்கிய மேற்படி இராஜதந்திரி மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையில் நீண்ட காலமாகவே பல்லாயிரக் கணக்கான உயிர்கள் பறிபோகவும், பலர் அங்க வீனர்களாகவும் அநாதைகளாகவும் காரணமாக விருந்த கொடிய யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவர நோர்வே அரசு முழு முயற்சியுடன் ஈடுபட்டுவருகிறது.

நோர்வேயின் முயற்சிகளை இலங்கையின் அண்டை நாடான இந்தியாவாலோ அன்றி தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளாலோ குழப்ப முடியாது எனத் தெரிவித்துள்ளார். (உ-4)

## குண்டுவெடிப்பு விசாரணை

(கொழும்பு)

1996 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கி குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இவ் வழக்கின் முக்கிய சாட்சியான பொலிஸ் அதிகாரி இந்திக கருணாரட்ண பலத்த பாதுகாப்புடன் மன்றுக்கு அழைத்து வரப்பட்டு சாட்சியமளித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இவ் வழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளைபிரபாகரன் உட்பட 10 பேர் எதிரிகளாக குறிப்பிட்டுள்ளமைதெரிந்ததே.

இவர்களில் 4 ஆம்5 ஆம் எதிரிகளான இருவரும் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். (உ-4)

# பாலர் பாடசாலை ஆசிரியர்க்கு தமிழ்மொழி மூல டிப்ளோமா

[கொழும்பு]

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான தமிழ் மொழி மூல டிப்ளோமா பாடநெறி கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாலர் பாடசாலைகளில் 3 வருடங்களுக்கு குறையாத கற்பித்தல் அனுபவத்துடன் க. பொ. த. (சா/த) அல்லது க. பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த 35 வயதுக்கு மேற்பட்டோர் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

6 மாத காலங்களை கொண்டதாக இருக்கும் இவ் டிப்ளோமா கற்கை நெறிக்கு பரீட்சை ஒன்றின் மூலமே தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (உ)

## பொ. ஐ. ஐ: மு ஆட்சிக் காலத்தில் 18 ஆயிரத்து 600 படைவீரர் உயிரிழப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துகின்ற கடந்த 6 வருட காலங்களில் 18 ஆயிரத்து 600படையினர் உயிரிழந்துள்ளனர்.

இத் தகவலை நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் ஐ. தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயவிக்கிரம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ. தே. கட்சி ஆட்சியின் போது யுத்தத்தில் இறந்த படையினரின் எண்ணிக்கையை விட மூன்று மடங்கு அதிகமான படையினர் கடந்த 6 வருடங்களில் உயிரிழந்துள்ளனர் என்றார். (உ)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மார்ச் மாதம் 19ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றது.

| | |
|---|---|
| 14762 ஏ | 14731 பி |
| 14762 சி | 14762 பி |
| 14762 ஈ | 14762 டி |
| 14765 பி | 14765 ஏ |
| 14805 ஏ | 14770 ஏ |
| 14859 ஏ | 14859 பி |
| 14859 சி | 14869 ஏ |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 181791 ஏ | 181791 பி |
| 181791 சி | 184393 ஏ |
| 185790 ஏ | 185790 பி |
| 185790 சி | 185790 டி |
| 185850 ஏ | 185935 ஏ |
| 185950 ஏ | 185950 பி |
| 186070 ஏ | 186070 பி |
| 186126 ஏ | 186238 ஏ |
| 186264 ஏ | 186279 பி |

### ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| 14586 ஏ | 14731 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 184500 ஏ | 184500 பி |
| 184500 சி | 184642 ஏ |
| 186269 ஏ | 186270 ஏ |
| 186271 ஏ | |

### வேலணை

| | |
|---|---|
| 14716 ஏ | 14716 பி |
| 14791 ஏ | 14816 ஏ |
| 14824 ஏ | 14824 பி |
| 14824 சி | 14824 டி |
| 14833 ஏ | 14837 ஏ |
| 14837 பி | 14737 சி |
| 14856 ஏ | |

### கிராமிய...

(7ஆம்பக்கத் தொடர்ச்சி)

மாகும். மேற்கூறப்பட்ட விடயங்கள் அம்சங்கள் மக்கள் முன் வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் விழிப்புணர்வு பெற்று அதற்கு செயல் வடிவம் கொடுத்தார்களா? இவற்றின் மூலம் சிறுவர்கள் உரிமைகள் வளர்க்கப்பட்டதா? அல்லது தற்போது மறுக்கப்படுகின்றதா? சிறார்கள் நன்மைகள் பெற்று சுதந்திரமாக செயல்படுகின்றார்களா? என்பன போன்ற விடயங்கள் கிராம மட்டத்தில் புள்ளி விபரங்கள் எடுத்து தொகுக்கப்படவேண்டும். இவைகளை வைத்து நாம் மதிப்பீடு செய்து பார்த்தால் குறிப்பிட்ட இலக்கை எத்தனை வீதம் அடைந்திருக்கின்றோம் என்பதைக் கணிக்க முடியும். ஆகவே கிராம மட்டத்தில் நாம் முற்று முழுதாக இலக்கை அடைய தோளோடுதோள் கொடுத்து கையொடு கைகொடுத்து சிரித்து வாழும் சிறார்களை பிறர் சிரிக்கவைக்காமல் அவர்கள் சிரித்து வாழ ஓரணியில் திரண்டு வளமான சமுதாயத்தை அமைப்போமாக.


## கேள்வி அறிவித்தல்

**பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்.**

1. பற்சிகிச்சை நிலையம் நிர்மாணித்தல், வேலணை. வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபையினரால், 2001 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 11 ஆம் திகதி புதன் கிழமை காலை 10.30 மணி வரை யாழ்ப்பாணம். பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் 'இக்ராட்' [ICTAD] கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-9 இலும் அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோராவார்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். மீளளிக்கப்படும் வைப்புப் பணம் ரூபா 10,000 ஐயும் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 500 ஐயும் யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2001 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 03 ஆம் திகதி பிற்பகல் 4.45 மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
6. இவை தொடர்பான மேலதிக விபரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர் கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

பிரதம பொறியியலாளர்.

**பிரதம எந்திரி அலுவலகம்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1618)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

## அறிவித்தல்

**நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) கற்கை நெறி இரண்டாம் வருடமுதலாம் அரையாண்டுப் பரீட்சை**

**ஆங்கில பாடம்**

மேற்படி ஆங்கில பாட பரீட்சை 23.03.2001, பி.ப 2.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

பதிவாளர்

19 - 03 - 2001

[கி-1619]



## 31-ம் நாள் நினைவஞ்சலி

### கனகர் கந்தசாமி

19-02-2001 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரும், தென்னை, பனம் பொருள் கூட்டுறவுச் சங்க முன்னாள் பரிசோதகருமான கனகர் கந்தசாமி அவர்களின் அந்தியேட்டிக் கிரிகைகள் இன்று 21-03-2001 புதன்கிழமை காலை 10-00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திக் கிரிகையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை. (கி-1616) குடும்பத்தினர்.



## G. T. Z.

**யாழ். புனரமைப்புத் திட்டம்**

**கூறுவிலை கோரல்**

எமது நிறுவனத்தினால் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்படவிருக்கும் வீடுகள் புனரமைப்புத் திட்டத்திற்கு வழங்கப் படுவதற்கு மண், கல், சல்லி, சீமெந்து கற்பி, வகைகள் உட்பட ஏனைய கட்டிட பொருட்கள் சம்பந்தமாக விநியோகத்தவர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இதற்கான மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் இல. 11 கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் பெற்று 30-03-2001 வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

G. T. Z. பிரதம இணைப்பாளர்.

(2642)

# செய்தித் துளிகள்

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ஆ. விவேகானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் கே. மணிபல்லவராஜன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (உ)

★ ★ ★

[கோப்பாய்]

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளின் கனிஷ்ட பிரிவினர்களுக்கானமெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக கோப்பாய்க் கோட்டக்கல்விப்பணிப்பாளர் இ. சிவஞனசுந்தரம் தெரிவித்துள்ளார். [உ-79]

## மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்தவர்களான சின்னத்துரை சுபாகரன் (வயது 25) சகோதரர்களான வேலாயுதம் ஜெயராசா (வயது21) வேலாயுதம் சிவராசா(வயது 26)ஆகிய மூவரையும் 512 வது படைப்பிரிவினர் திருநெல்வேலிப்பகுதியில்வைத்து கைது செய்திருப்பதாக உறவினர்களால்மனித உரிமைகள் ஆணைக்குழுவில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்களுள்வேலாயுதம் சிவராசா ஓர் அரசபணியாளர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-10]

## கிணற்றுள் வீழ்ந்து கைமுறிவு

[யாழ்ப்பாணம்]

தவறுதலாக கிணற்றுள் வீழ்ந்தவர், கைமுறிந்த நிலையில் யா/போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கதிரிப்பாய் அச்சுவேலியைச் சேர்ந்த முதலிஐயாத்துரை (வயது67)என்பவரே கைமுறிவுக்கு நேற்று முன்தினம் முதல் யா.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (உ-10)

## ஆசிரியர் வழிகாட்டல் ஆலோசனை

[மந்திகை]

தென்மராட்சி வலயகல்வித்திணைக்களத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர்க்கானவழி காட்டலும்ஆலோசனை வழங்கலும் எதிர்வரும் 24, 25ம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இக் கருத்தரங்கில் சகல ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயகல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (உ-23]

## புராண படன போட்டி

(இணுவில்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் தரம் 10, 11, 12, 13 மாணவர்களுக்கான புராண படனப் போட்டி. வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப 9.00மணிக்கு நடத்தப்படவுள்ளது. (உ-49)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கிழக்கு கும்பலை, மணற்புலம் நரசிங்க வைரவர் ஆலய ஜீர்ணோத்தாரண நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ)

## கலந்துரையாடல்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம்கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் கலந்துரையாடல் ஒன்று நாளை பி.ப. 5.00மணிக்கு தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது. (உ-59)

## இளைஞர் கைதென அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக வீதி கொக்குவிலைச் சேர்ந்த விமலதாசன் பாஸ்கரன் (வயது 29) என்பவரை இம் மாதம் 18 ஆம் திகதி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்திருப்பதாக 512 வது படைப்பிரிவினர் யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி எஸ். ஜீவேஸ்வராவிடம் அறிவித்துள்ளனர். [உ-10]

## விபத்தில் காயம்

[யாழ்ப்பாணம்]

யா. திருக்குடும்ப கன்னியர் மடம்ஆங்கிலப்பாடசாலைக்கு முன்பாக இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அகப்பட்ட இருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுதுமலையைச் சேர்ந்த தி. கமல்ராஜ் (வயது 18), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ச. றதிமலர்(வயது32) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். (உ-6]

## முடிவுத்தினம் 31ஆம் திகதி

(கல்வியங்காடு)

ஜே/109 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிப்பவர்களுக்கான 2001 ஆம் ஆண்டுக்குரிய குடும்பப் பதிவுப் பத்திரத்தைப் புதுப்பிக்கும் இறுதித்தினம் இம் மாதம் 31 ஆம் திகதியென சம்பந்தபட்ட கிராம அலுவலர் அறிவித்துள்ளார். [உ-54]

## 2 ஆம் திகதி வரை விளக்க மறியல்

(மந்திகை)

மிருசுவில் பகுதியில் இடம் பெற்ற 8 பேரினதும் படுகொலை சம்பவத்தின் சூத்திரதாரிகள்எனசந்தேகிக்கப்படும் 14 பேரும் கடந்த திங்களன்று தம்பசிட்டியில் இயங்கும்சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதிமுன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை அடுத்த மாதம் இரண்டாம்திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு நீதிபதி அன்னலிங்கம் பிறேம் சங்கர் உத்தரவிட்டார். (உ 23)

## அனுமதி வழங்கப்படுமா?

(கோப்பாய்)

கோப்பாய், கைதடி வீதியைப் பொதுமக்கள் பயன்படுவதற்கான அனுமதிவழங்கப்பட்ட போதிலும் இவ்வீதியில் அமைந்துள்ள இந்து மயானத்தையும் அந்தியேட்டி மடத்தையும் பயன்படுத்துவதற்கான அனுமதி இது வரை வழங்கப்படவில்லை. (உ-79)

# அரசு-எதிர்க்கட்சியும் ஒன்றுபட்டாலே யுத்தத்திற்கு முடிவு காணலாம்

(கொழும்பு)

''யுத்தத்திற்கு முடிவு காண வேண்டுமானால் அரசும் எதிர்க்கட்சியும் பொது உடன்பாடொன்றுக்கு வர வேண்டும்''

இவ்வாறு விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் வெஸ்லிகுணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அரசும் எதிர்க்கட்சியும் பொது உடன்பாட்டுக்கு வரவில்லையானால் யுத்தத்திற்கு ஒரு போதும் தீர்வு காண முடியாது.

யுத்தத்திற்கும் அதனால் ஏற்படும் பொருளாதார பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் நோக்கிலேயே வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்திற்கான தீர்வுகள் பற்றிப் பேச்சுகளில் ஈடுபடாமல், எதிர்த்தரப்பை எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே பேசுகின்றார்கள்.

அரசும் எதிர்க்கட்சியும் வெறுமனே எதிர்த்துப் பேசிக் கொண்டிருக்காமல் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வழிகளை ஆராயவேண்டும்.

என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## நோய்த் தாக்கம்

[யாழ்ப்பாணம்]

தற்போது யாழ். குடாநாட்டில் அம்மை, சின்னமுத்து முதலிய நோய்களின் தாக்கம் பரவலாகக் காணப்படுகிறது.

நிலவி வரும் கடுமையான வெப்பம் காரணமாக உஷ்ணம் மேலிடுவதால் இந் நோய் பரவி வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## கண்சிகிச்சை உபகரணங்கள் நேற்று வைபவரீதியாக கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுலயன்ஸ் கழகங்களின் வேண்டுகோளுக்கிணங்க சர்வதேச லயன்ஸ் கழகங்களின் நிறுவனங்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 45இலட்சம் ரூபாபெறுமதியானகண் சத்திர சிகிச்சை உபகரணங்களை யாழ். போதனாவைத்திய சாலை ஆண்களின் கண்சிகிச்சைக் கூடத்தில் வைத்து மாவட்ட ஆளுநர் லயன் ரோகித்த உடவத்; வைபவரீதியாகக் கையளித்தார்.

நேற்றுக் காலை 9 30மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நல்லை ஆதீனமுதல்வர், யாழ் ஆயர். கண் சிகிச்சை நிபுணர் குகதாசன், ஆறு திருமுருகன் உட்படலயன்ஸ்வலய,பிரதேச தலைவர்களும்,பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (உ- 104 108)

# இராசி பலன்

21.03.2001
(பங்குனி 8, புதன்)
துவாதசி பி.இ 2.30 வரை
திருவோணம்மு.ப10.13வரை
ராகுகாலம் 12.18- 1.48
சுபநேரம் 4.48- 6.18
சித்தம்.

**மேடம்**
உத்தியோக மேன்மை, அதிகாரம், நல்ல செய்தி, காரிய நன்மை.

**இடபம்**
பிரயாணம், கட்டுப்பாடு, ஆன்றோர் ஆசி, அரச நன்மை.

**மிதுனம்**
காரிய தடங்கல், எதிர்பாராத பிரச்சினை, வீண் தொல்லை, பிரயாண பயம்.

**கடகம்**
சுவாரஸ்யம், களஸ்த்திர சுகம், பிரயாணம், முயற்சி ஜெயம்.

**சிங்கம்**
புதிய முயற்சி, எதிரிகளால் நன்மை, திடீர் பயணம், நோய் குணமடைதல்.

**கன்னி**
ரோகம், சகோதரர்உதவி, புத்திரரால் கவலை, முயற்சி தாமதம்.

**துலாம்**
தாய் வழி உறவு, தன்னம்பிக்கைக் குறைவு, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
நிலைக்கேடு, சகோதரர் உதவி, அந்நியர் சந்திப்பு, காரிய நன்மை.

**தனுசு**
தனவிரயம், விதண்டாவாதம், கௌரவக் குறை, மாதர் நட்பு.

**மகரம்**
ஆழ்ந்த சிந்தை, ஜனவசியம், சயனசுகம், நல்லஉணவு கிடைத்தல்.

**கும்பம்**
பிரயாணம், உணர்ச்சி வசப்படல்,சுபசெலவு, காரிய தாமதம்.

**மீனம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, பொருள் வரவு, மனமகிழ்ச்சி, முயற்சி நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## இளைஞர் குழு வீடு புகுந்து தாக்குதல் ஐவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

இரவு நேரம் வீடு புகுந்த இளைஞர் குழு, அங்கிருந்தோரை கத்தி, பொல்லுகள் சகிதம் தாக்கிய சம்பவம் கடந்த ஞாயிறன்று றொட்டியாலடிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இவ் அடிதடியில், 3 இளைஞர்கள் மற்றும் இரு யுவதிகள் காயங்களுக்குள்ளான நிலையில் யா.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் சுன்னாகம் பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து, சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ-10,6)

## மிதி வெடியில் சிக்கிய மாணவர் இருவர் ஒருவரது கால் துண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

மாடு மேய்க்கவென வயல் வெளிக்குச் சென்ற மாணவர் இருவர் மிதிவெடியில் சிக்கிய சம்பவம் கடந்த ஞாயிறன்று புத்தூர் மேற்கில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலைக்குச் செல்வதாகப் பெற்றோருக்குப் பொய் கூறி விட்டு, உறவினருடன் மாடு மேய்க்கச்சென்றவேளையில் மிதி வெடியில் சிக்கி புத்தூர் மேற்கைச்சேர்ந்தஇராமராசு ரமணரூபன் (வயது 12) என்ற தரம் 6மாணவன்வலது காலை இழந்துள்ளான்

அருகில் நின்ற இராசதுரை சந்திரகுமார் (வயது12 என்ற தரம்6 மாணவர் காயமடைந்துள்ளான். (உ)

## கணனிச் செயற்பாடுகளை சீர்குலைப்போர் மீது கடும் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

கணனி வலையமைப்பில் வைரஸினைப்புகுத்தி அதன் செயற்பாடுகளை சீர்குலைக்கும் நபர்களிற்கு கடுமையான தண்டனை அளிப்பதற்கு அமைவாக தற்போது உள்ள சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள நீதியமைச்சு உத்தேசித்துள்ளது.

இத் திருத்தங்கள் குறித்த சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெறுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

புதிய சட்ட திருத்தத்தின் கீழ் கணனி நிலையங்களை கட்டுப்படுத்தவும் கணனி நிலையங்களின் திறனை வலுப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் நீதிபமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-3)

## பூரான் கடிக்கு இலக்கான மூவர் ஆஸ்பத்திரியில்

[மந்திகை]

ஒரே இரவில் பூரான் கடிக்குள்ளான மூவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 18ம் திகதி இரவு அல்வாய்கிழக்கு மடத்தடியைச் சேர்ந்த பத்மநாதன் நிலநேசன் [வயது10] கற்கோவளம் புனித நகரைச் சேர்ந்த முனியாண்டி மாலதி [வயது 28] துன்னாலை வல்லிபுரக் குறிச்சியை சேர்ந்த துரைசிங்கம் புஸ்பமலர் [வயது 33 ஆகிய மூவருமே பூரான கடிக்குளளாகியுள்ளனர்.

வடமராட்சிப் பகுதியில் அண்மைக்காலமாக பூரான் கடிக்குள்ளானோரின எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-23

# தரம் 5புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல-09

### ஆக்கம் : செல்வி

★ **பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக**

1) தெங்கு + காய் ————————
2) வெறுமை + இலை ————————
3) செம்மை + இதழ் ————————
4) ஐந்து + ஐந்து ————————
5) பத்து + இரண்டு ————————

★ **பின்வரும் எழுத்துக் கூட்டங்களில் உள்ள எழுத்துக் களைப் பொருத்தமாகச் சேர்த்து கருத்துள்ள ஐந்து சொற்கள் ஆக்குக.**

ம், கா, ன, வ, பூ, ங்

6) ————————
7) ————————
8) ————————
9) ————————
10) ————————

★ **பின்வரும் இடைவெளியில் பொருத்தமான சொல்லோ, எழுத்தோ இட்டு இரு கருத்துச் சொல் அமையுமாறு ஆக்குக.**

11) துன் ———— பரம்
12) வாய்க் ———— நகம்
13) உல்லா ———— பவம்
14) கூர் ———— பொடி
15) பஞு ———— மன்றம்

★ **பின்வரும் பாடலைப் படித்து, அதன் கீழுள்ள வினாக் களுக்கு விடை தருக.**

"———— பாட்டியார் செத்து விட்ட பன்னிரண்டாம் நாளென்பர், ஓயாமற் பொய்யுரைப்பார்; ஒன்றுரைக்க வேறு செய்வார்; தாயாதியோடு தனியிடத்தே பேசிடுவர்; உள்வீட்டுச் செய்தியெல்லாம் ஊரம் பலத் துரைப்பார்; என் வீட்டில் இல்லை என்றால் எங்கும் முரசு அறைவார் ————"

16) இப்பாடலைப் பாடியவர் யார்?
17) இப்பாடலில் குறிப்பிடப்படும் பாத்திரம் என்ன?
18) இப்பாடலில் கூறப்படும் பாத்திரம் எத்தகைய பண்புகள் வாய்ந்தவன்?
19) தாயாதி என்பதன் பொருள் என்ன?
20) "———— எள்வீட்டில் இல்லை என்றால் எங்கும் முரசறைவார் ———" என்னும் பாடல் அடிகள் மூலம் புலப்படுத்தப்படுவது யாது?

★ **பின் வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ப்பதத்தை எழுதுக**

21) COCONUT ————————
22) SUGAR ————————
23) PROTEIN ————————
24) BONE ————————
25) BLOOD ————————

★ **பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்வரும் வினாக் களுக்கு விடை தருக**

சுதா, லதாவிலும் திறமையாகப் பாடுவாள். ஆனால் ஆடமாட்டாள். கீதா திறமையாகப் பாடமாட்டாள் ஆனால் நன்றாக சித்திரம் வரைவாள். நன்கு சித்திரம் வரையக் கூடிய லதா நன்கு ஆடுவாள். ராதா பாடுவதிலும் வரைவதிலும் ஆடுவதிலும் திறமையானவள்.

26) நன்றாக சித்திரம் வரையவும் ஆடவும் கூடியவர் யார்?
27) மூன்று கலைகளிலும் சிறந்து விளங்குபவர்கள் யார்?
28) ஆடற் கலை தெரியாதவர் யார்?
29) நன்கு சித்திரம் வரைபவர் யார்?
30) சுதாவிற்கு தெரிந்த கலை எது?

**குறிப்பு:-**

விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 27-03-2001 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## கல்விப் பகுதி
## வினா இல- 09

"வலம்புரி"

இல: 15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................

சொந்த முகவரி: ..............................

கற்கும் பாடசாலை: ..............................

மாணவர் கையொப்பம்: ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## கண்ணீர் ஆற்றில் பூக்கள்

(கோப்பாய்)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் விசேட கல்விப் பிரிவினரால் "கண்ணீர் ஆற்றில் பூக்கள் பூத்தன" என்ற தலைப்பிலான கையேடு ஒன்று சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுளளன.

மாகாணத்தின் விசேடகல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கே. ஏ. ஏ. மல்காந்தி தயாரிப்பிலான இச்சுற்று நிருபம், மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தனின் மேற்பார்வையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

(உ- 79)

## வினா அறிவுறுத்தலை நன்கு விளங்க வேண்டும்

வினாக்களுக்கான அறிவுறுத்தல்கள் வித்தியாசமானவையாக வரும். வினாக்களுக்குரிய அறிவுறுத்தல்களுக்கு உட்படாத விடைகள் சரியாக இருந்தாலும் நிராகரிக்கப்படும். இதனால் கெட்டித்தன மானவர்கள் சித்தியடையத் தவறுகிறார்கள்.

இருவினாப் பத்திரங்களிலும் அனேகமாக படங்களே உள்ளன படங்களில் இருந்து தான் விடைகளைத் தெரிவு செய்தல் வேண்டும்.

ஒவ்வொருவருடமும் வெவ்வேறு விதங்களில் கேள்விகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் எமது ஆசிரியர்கள் பலர் முதல் வருடம் வந்த வினாத்தாளின் அமைப்பிலேயே அடுத்த வருடத்திற்கும் ஆயத்தப்படுத்துகின்றனர்.

**"வருடா வருடம் மாற்றியமைக்கப்படும் வினாக்களுக் கேற்ப, மாணவர்களைத் தயார் படுத்த வேண்டியது ஆசிரியர்களது கடமை ஆகும்"**

**கே. வி. குணசேகரம்**

1995ல் இருந்து 2000 ஆம் ஆண்டு வரையான காலப்பகுயில் முதல் வினா தரம் மூன்று, நான்கு, ஐந்து பாடத்திட்டத்திற்கு அமைவானது.

முதலாம் வினாத்தாளில் உள்ள படங்களின் ஆரம்ப நிலைகள் தற்பொழுது தரம் ஒன்றில் இருந்தே ஆரம்பிக்கப்படுகிறது. பாடசாலைக்கு முதல் நாள் வரும் பிள்ளையொன்றைப் பரீட்சிக்கும் ஆசிரியர் படங்களைக் கொடுத்தே பரீட்சிக்கிறார்.

இதன் வளர்ச்சிதான் தரம் ஐந்து வினாத்தாள் ஆகும். மிகவும் இலகுவான வினாக்களைக் கொண்ட இவ் வினாத்தாளை, பாடசாலை வேலைகளை ஒழுங்காகச் செய்யும் மாணவனொருவன் சுலபமாகச் செய்து விடுவான்.

ஆரம்ப விஞ்ஞானம் ஒரு முக்கியமான பாடமாகும். இப்பாடத்தை கற்பிப்பதை விட செய்து காட்டுவதே பயன் மிக்கதாகும். பொதுவாக தரம் ஐந்திற்கான பாடம் முழுவதும் செயல்களாகவே இருத்தல் வேண்டும்.

## புலமைப் பரிசில் பரீட்சை
## வினா இல-08

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர்விபரம்

01) இ.பிரதிகா, சரசாலை ஸ்ரீகணேசவித்தியாலயம்.
02) க.நிரோஜினி, யாழ் புனிதமரியாள் வித்தியாலயம்.
03) ப.திலக்ஸனா, அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை.
04) த.ஏகவரதன், யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை.
05) த நிலஜா, யாழ் இந்துமகளிர் ஆரம்பப்பாடசாலை.
06) சா அலன்டியந்தா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
07) சி துவாரகன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
08) ம கஸ்தூரி, மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.
09) நா நந்தகோபன், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.
10) சி.பிரணவன், மானிப்பாய் மெமோறியல்ஆங்கிலப்பாடசாலை.
11) சு.ராஜதிலீபன், புலோலிமகாவித்தியாலயம்.
12) இ.வினிபிறட்ஸ்ரீபன், யாழ். புனிதபத்திரிசியார் கல்லூரி.
13) அ.வஜீரன், யாழ். பரியோவான் கல்லூரி.
14) ர.தீபனா, தேவரையாளி இந்துக்கல்லூரி
15) நி.நிருபன், சாவ. இந்து ஆரம்பப்பாடசாலை.
16) ம ஷாளினி, வட இந்துமகளிர் கல்லூரி.
17) சி.கஜேந்தினி, சாவ. இந்து ஆரம்பப்பாடசாலை.
18) ப.தாமரா, யாழ் இந்து ஆரமபப் பாடசாலை.
19) பா கௌசிகா, தாவடி இ த.க.பாடசாலை.
20) வி.ஜெயதீபா, நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம்.
21) நா அனோஜினி, யாழ். இந்துஆரம்பப்பாடசாலை.
22) த.டயானி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை.
23) கு.மேரிஜசிந்தா, யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்.
24) ர.ரவிராஜ், தட்டாதெரு மெ.மி.த.க.பாடசாலை.
25. ம மேரிறெபிக்கா, திருக்குடும்ப கன்னியர் மடம்.
26) ஸ்ரீ.மயூலக்ஷன், திருநெல்வேலி இ.த.க.பாடசாலை.
27) ம.ரானியா, உடுவில் மகளிர் கல்லூரி.
28) ஜெ ஜெம்மா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
29) சி.பிரசாத், தட்டாதெரு மெ.மி.த.க.பாடசாலை.
30) ச.பிரவீணா, கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலயம்.
31) ப.நசிகேதன், யாழ். பரியோவான் கல்லூரி.
32) கி.நிரோஜன், தட்டாதெரு மெ.மி.த.க பாடசாலை.
33) வ.விபுசன் தட்டாதெரு மெ.மி.த.க பாடசாலை.
34) தி.தனம்ஜெயன், கோப்பாய் நாவலர் பாடசாலை.
35) மோ. ஜீர்த்தன், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி.
36) வி.கோகுலன், சுன்னாகம் நாகேஸ்வரிவித்தியாலயம்.
37) வி.மிதிலா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
38) பு.ராஜாராம், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
39) றொ. டெஸ்மன், உடுவில் மகளிர் கல்லூரி
40) க. சாயினி, நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம்.
41) ச. கஜலக்சனா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
42) பா. சாயிஷங்கர், வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி.
43) ச. அகிலன், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
44) இ. சர்மிலா, மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.
45) பூ. தர்மஜோதி, கொக்குவில் சி. சி. த. க பாடசாலை.
46) மோ. துவாரகன், அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.
47) ச, அனுஜன், அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.
48) கு. கஸ்தூரி, சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை.
49) நி. பிரசாந், அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.
50) ஈஸ்ரலின் டேவிட், உடுவில் மகளிர் கல்லூரி.
51) ம லவண்ராஜ், புலோலி புற்றளை மகாவித்தியாலயம்.
52) ஏ கஜலக்ஷி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
53) ஸ்ரீ தீபிகா, மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.
54) சி. லகீசன், மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்.
55) கி. ஜெயந்தினி, மானிப்பாய் சோதிவேம்படிவித்தியாசாலை.
56) கி. கோமளதரன், மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.
57) வி. கலெக்ஷனா, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாசாலை.
58) இ. தாரணி, யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயம்.
59) யோ. மருதிகா, அல்லாரை அ. த. க. வித்தியாலயம்.
60) கு. ஹரிராஜ், சண்டிலிப்பாய் றோ. க. த. க. பாடசாலை.
61) அ. கடோற்கஜன், யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை.
62) வி. விஜிதரன், பெரியபுலம் மகாவித்தியாலயம்.
63) பா. தயாளினி, மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை.
64) தெ. கஜறஞ்சிதன், புலோலி புற்றளை மகாவித்தியாலயம்.
65) ந. சுஜானி, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.
66) சி. ராகுலன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.
67) வே. யோகவேணி, வட இந்துமகளிர் கல்லூரி.

## புலமைப் பரீட்சை
## வினா இல-8
## விடைகள்

01) யானை
02) தாமரை
03) காடு
04) தோண்டுதல்
05) மலை
06) லயம்
07) சுத்தரிக்கோல்
08) மார்கழி
09) சீனி
10) பசு
11) கிளி
12) கந்தகம்
13) குழல்
14) பருத்தி
15) சின்னத்துரை
16) மாதம்
17) மிருகம்
18) கிழமை
19) மலர்
20) ஆபரணம்
21) அன்பளிப்புக்கள்
22) புகைப்படக்கருவி
23) வாழ்த்துமடல்கள்
24) முதலை
25) வண்ணத்துப்பூச்சி
26) சுஜி
27) கஜி
28) கஜி
29) குஜி
30) சுஜி

## விளையாட்டுப் போட்டி

(கோப்பாய்)

நீர்வேலி தெற்கு தமிழ்க் கலவன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் ஆ. சபாநாயகம் தலைமையில் இன்று பி. ப 2.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில்பிரதமவிருந்தினராக கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ சிவஞானசுந்தரம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை உடற்கல்வி விரிவுரையாளர் கே. கணபதிப்பிள்ளை, கிறிஸ்தவ கல்லூரி அதிபர் ந. சிவகடாட்சம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-79)

## இன்று ஒரு தகவல்

# நியாயத் தீர்ப்பு உண்டு

ஐஸ்வரியமுள்ள ஒரு மனுசன் இருந்தான். அவன் இரத்தினாம்பரமும் விலையேறப் பெற்ற வஸ்திரமும் தரித்து அனுதினமும் கம்பீரமாய் வாழ்ந்து வந்தான். அவன் விருப்பம் போல வாழ அவனுக்கு முடியும்.

அதே போல லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் வாழ்ந்து வந்தான். அவன் உடல் எல்லாம் பருக்களால் நிறைந்திருந்தது. அந்தப் பருக்களை நாய்கள் நக்கும். அந்தளவுக்கு பஞ்சம், பசி, பட்டினி, ஆரோக்கியக் குறைவுள்ளவனாக, பெலம் குறைந்தவனாக, இருந்தான். இவன் இந்தஐஸ்வரியவானின் வாசலருகில் கிடந்தான். அவன் மேசையில் இருந்து விழும் உணவுத் துணிக்கைகளால் தன் பசியை ஆற்ற ஆசையாக இருந்தான். அந்த ஐஸ்வரியவான் இவனைப் பொருட்டாக கருதவில்லை. அவனிடம் அளவுக்கதிகமாக இருந்தது.

ஒரு நாள் இந்த லாசரு என்ற தரித்திரன் மரித்துவிட்டான். உடனே தேவ தூதர்கள் அவனை எடுத்து ஆபிரகாம் என்னும் நீதிமானுடைய மடியிலே கொண்டுபோய் வைத்தார்கள். அங்கே அவன் தேற்றப் பட்டான், ஆறுதல் அடைந்தான்.

அதே போல அந்த ஐஸ்வரியவானும் மரித்து அவனையும் அடக்கம் பண்ணினார்கள். உடனே அவன் பாதாளத்துக்குள் தள்ளப்பட்டான். அங்கே பெரும் வேதனையை அனுபவித்தான். அக்கினி ஜுவாலை அவனை துடிக்க வைத்தது. அவன் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும் போது தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன் என் தகப்பனாகிய ஆபிரகாமே, எனக்கு இரங்கும். லாசருவை என்னிடம் அனுப்பும் அவன் தன் விரலை தண்ணீரில் தோய்த்து, என் நாக்கில் புரட்டி நாவைக் குளிரப் பண்ணட்டும். அவனை அனுப்பும். இந்த அக்கினி ஜுவாலையில் நான் துடிக்கிறேன். என்று கூப்பிட்டான்.

அதற்கு ஆபிரகாம் மகனே நீ பூமியில் இருக்கும் காலத்தில் சகல நன்மைகளையும் அனுபவித்தாய். எந்தக் குறைவுமற்றிருந்தாய். அதே போல இந்த லாசரும் தீமைகளை அனுபவித்தான். பல கஷ்டங்களை அனுபவித்தான். அதனை நினைத்துக் கொள். இப்போது அவன் தேற்றப்படுகின்றான். நீயோ வேதனை அனுபவிக்கிறாய். அது மாத்திர மல்ல இவ்விடத்திலிருந்து உவ்விடத்துக்கும். உவ்விடத்திலிருந்து இவ்விடத்துக்கும் வர மனதுண்டானாலும்அது முடியாது. ஏனென்றால் எங்களுக்கும் உங்களுக்கும் நடுவாக பெரும் பிளம்பு உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

அப்படியானால் என் தகப்பனே எனக்கு ஐந்து சகோதரர்களுண்டு: அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடிக்கு, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு அவனை நீர் என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மிடம் மன்றாட்டமாகக் கேட்கிறேன் என்றான். அதற்கு ஆபிரகாம், அங்கே மோசேயும், தீர்க்கதரிசிகளும் உண்டு அவர்களுக்கு செவி கொடுக்கட்டும் என்றான்.

அதற்கு அப்படியல்ல என் தகப்பனாகிய ஆபிரகாமே மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து அவ்விடத்துக்குப் போனால் மனம் திரும்புவார்கள் என்றான். அதற்கு ஆபிரகாம் மோசேக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் செவி கொடுத்து அவர்கள் உபதேசத்தைக் கேட்காதவர்கள். மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும் நம்ப மாட்டார்கள் என்றார். கண்டு விசுவாசிக்கிறவனைப் பார்க்கிலும் காணாதுவிசுவாசிப்பவன் பாக்கியவான்.

பூமியிலே வாழும் போது கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை மறந்து தன்னிச்சையாக வாழ்பவர்களுக்கு எப்படியான நியாயத்தீர்ப்பு கிடைக்கும் என்பதைச் சித்தரித்து இயேசு நாதர் கூறிய உபமானக் கதை இது. இதைச் சிரமேற்கொண்டு சிந்தித்து செயல்பட ஒவ்வொருவரும் முயல வேண்டுமென்பதே எம் ஆவல்.

மு. கிருஷ்ணன்

# மாணவியரை பின்தொடரும் வீணர்

# கொட்டமடக்க மக்கள் தயார்

(ஈச்சமோட்டை)

பாடசாலை செல்லும் மாணவிகளுக்கு தொல்லை கொடுத்துவரும் நபர்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக யாழ் நகரப்பகுதி பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவிகளின் பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக, தமது வேலைகளை எல்லாம் புறம் தள்ளிவிட்டு பிள்ளைகளைப் பாடசாலைக்கு கூட்டிச் செல்லவும், கூட்டிவரவும் வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளதுடன்,

பாடசாலை மாணவிகள் பலர் தமது கல்விச் செயற்பாடுகளில் அக்கறைகுன்றிக் காணப்படுவதாகவும் பெற்றோர் தரப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, சுண்டுக்குளிப் பகுதியில், மாணவிகளின் பெற்றோர், உறவினர் பலர் ஒன்றுதிரண்டு வீணர்களின் கொட்டமடக்க தயாராகி வருவதாகவும் தெரிய வந்துள்ளது (உ-59)

## அன்னை பூபதி நினைவு கூரல்

(வவுனியா)

தியாக தீபம் அன்னை பூபதியின் 13 வது ஆண்டு நினைவு தினச் செயற்பாடுகள் கடந்த 19ஆம் திகதி தொடக்கம் வன்னிப் பெருநிலப்பரப்பில் உணர்வு பூர்வமாக இடம் பெற்று வருவதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. (உ-4)

## சமுர்த்தி செயலணி

(இணுவில்)

இணுவில் கிழக்கு ஜே/189 சமுர்த்தி செயலணிக் குழு அமைக்கும் கூட்டம் இன்று பி.ப.3.00 மணிக்கு இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (உ-49)

## புதுக்குடியிருப்பில் எழுச்சி மாநாடு

[வவுனியா]

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க எழுச்சி மாநாடு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் மு.ப 10.00 மணியளவில் ஈகைச் சுடரேற்றலுடன். ஆரம்பமாகியது.

இவ்வெழுச்சி மாநாட்டில் தலைமையுரையினை தமிழர் ஆசிரியர் சங்கத் துணைத் தலைவர் அன்ரன் ஜெகநாதனும் சிறப்புரையினை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவமும் நிகழ்த்தினர். (உ-4)

## குரு பூசை விழா

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் நல்லைக் குருமணி ஸ்ரீல ஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் 20 வது ஆண்டு குரு பூஜை ஆராதனை விழா வரும் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை குருமூர்த்த ஆலயத்தில் இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் யாக பூஜை, சங்காபிஷேகம், மகேசுவர பூஜை, மாலைநிகழ்ச்சிகளாக திருநெறிய தமிழ் இசை உரை அரங்கு, கந்தபுராண படனம் என்பனவும் இடம் பெறும். (உ)

## காங்கேசன் விஜயம்

(யாழ்பபாணம்)

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக அதிகாரி என் ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப்பார்வையிடவுள்ளார்.

கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் அவர் எடுத்துச் சென்று கையளிப்பார்.

அதேசமயம் கைதிகளினால் அவர்கள் உறவினர்களுக்கு வழங்கப்படும் கடிதங்களையும் அவர் எடுத்து வந்து ஒப்படைப்பார். (உ-10)

## நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புப் போட்டி பரீட்சை ஜூனில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

22வயதிற்கும்28வயதிற்கும் உட்பட்ட பட்டதாரிகள் இந்தப் போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான எழுத்துப் பரீட்சைகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஜூன் மாதத்தில் நடத்தப்படவுள்ளதாகவும்,

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 9ஆம் திகதிக்குமுன்னர் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைக்குமாறும் அரச வர்த்தமானிமூலம் அறிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வர்த்தமானி விபரத்தினை வலம்புரிப் பத்திரிகைக் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (உ)

## மூன்று வயது குழந்தை நிலத்தில்அடித்துக்கொலை

(கொழும்பு)

மூன்றுவயதுப் பெண் குழந்தை ஒன்று நிலத்தில் அடித்துக் கொலை செய்யப் பட்ட சம்பவம் அண்மையில் உடுகமப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

தியத்தலாவையைச் சேர்ந்த 30 வயதுடைய ஊர்காவல் படை வீரனான போஸிகிருஷாந்த என்பவரே தனது 3 வயது மகளை நிலத்தில் அடித்துக் கொன்றுள்ளார்.

சம்பவம் நிகழ்ந்த சமயம் அச்சிறுமியின் தாயார் சம்பவ இடத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது (உ-9)

## சாரதி அனுமதி விண்ணப்ப படிவம் வழங்கும் பணி நிறுத்தம்

[யாழ்ப்பாணம்]

சாரதி அனுமதிப் பத்திரம் பெறும் விண்ணப்பப் படிவங்கள் வழங்கும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டிருப்பதாக சம்பந்தப் பட்ட திணைக்களம் அறிவித்துள்ளது.

சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பப் படிவங்களைப் பெற்றவர்கள் அதனை பூரணப்படுத்தி திரும்ப ஒப்படைப்பதில் காட்டுகின்ற தாமதபபோக்கு காரணமாகவே இவ் இடைநிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்,

மீளப் பணிகள் ஆரம்பிப்பது தொடர்பான அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் பதிவுகள் யாவும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## மானிய விலையில் தேங்காய்

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது வடமராட்சியில் தங்கியிருக்கும் பொதுமக்களுக்கு அண்மையில் பருத்தித்துறையில் வைத்து மேற்படி பிரதேச சபைத் தலைவர் தலைமையில் மானிய விலையில் தேங்காய் விற்பனை செய்யப்பட்டுள்ளது. (உ)

## சந்தை துப்பரவு

(இணுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை ஊழியர்களால் மருதனார் மடம் சந்தை மற்றும் அதன் அருகில் உள்ள பிரதேசசபைக்குச் சொந்தமான காணி என்பன அண்மையில் துப்பரவு செய்யப்பட்டன. (உ-49)

## விமான நிலையத்துள் புகத் தடை

[கொழும்பு]

கொழும்பு கட்டு நாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பொதுமக்கள் பார்வைக்கூடம் நேற்று முன்தினம் நள்ளிரவிலிருந்து இன்று நண்பகல் 12 00மணி வரையும் பொதுமக்கள் பிரவேசத்திற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என விமான நிலைய வட்டாரங்கள் அறிவித்துள்ளன. [உ-4]

## விண்ணப்பித்தோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம)

யா/ கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் இந்த ஆண்டுக்கான புதிய சற்கை நெறிககு விண்ணப்பித்து எதுவித அறிவித்தல் கடிதங்களும் இதுவரை கிடைக்கப் பெறாத மாணவர்கள் நேரில் வந்து தொடர்பு கொள்ளுமாறு மேற்படிகல்லூரிஅதிபர் அறிவித்துள்ளார். (உ- 6)

## வலய மட்டத்தில் தமிழ்த்தினப் போட்டி மே-21 இற்கு முன்பாக

(யாழ்ப்பாணம்)

இவ் வருடம் இடம்பெறவுள்ள தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெறுவது தொடர்பான விதி முறைகள் மற்றும் தினங்கள் குறித்த சுற்றறிக்கைகள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம், வலிகாமம் கல்வி வலயத்தில் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக தமிழ்த்தினப் போட்டிகளும்,

மே மாதம் 14 ஆம் திகதிக்கு முன்பாக கோட்டமட்டப் போட்டிகளும்,

மே மாதம் 21 ஆம் திகதிக்கு முன்பாக வலய மட்டப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் நாட்டுக் கூத்து, ஆடற்கலை, சிறுவர் நாடகம் என்பன விசேடமாக இடம்பெறவுள்ளது. (உ-49)

## வேலை வாய்ப்புத்தேடி வெளிநாடுசென்றபெண்கள் 79 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

தொழில் வாய்ப்புப்பெறும் நோக்கில் வெளிநாடு சென்ற 79 இலங்கைப் பெண்கள் தொழில் கொள்வோரால் துன்புறுத்தப்பட்டும், உரியசம்பளம் வழங்கப்படாமலும் உடல், உளரீதியாக பாதிக்கப் பட்ட நிலையில் நேற்று முன் தினம் நாடுதிரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் வெளிநாட்டுப்பணிமனையின் சீதுவைக் கிளையில் தங்க வைக்கப்பட்டு மருத்துவ சிகிச்சைகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். (உ)

# நீர் தொடர்பான நோய்களால் 34 இலட்சம் பேர் உயிரிழப்பு

## உலக சுகாதார ஸ்தாபனம் அறிக்கை

(வாஷிங்டன்)
ஒவ்வொரு வருடமும் நீர் சம்பந்தமான நோய்களில் சிக்கி 34 இலட்சம் பேருக்கும் அதிகமானோர் உயிரிழப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

நாளை அனுட்டிக்கப்படும் உலக நீர் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

உலகில் ஆறில் ஒரு பங்கினருக்கு போதியளவு நீர் கிடைப்பதில்லை. இந் நீர்ப்பிரச்சினை காரணமாக உலகம் முழுவதும் வருடாந்தம் சுமார் 300 மோதல்கள் இடம் பெறுகின்றனஎனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-9)

# ஜெயலலிதாவுடன் த.மா.கா.கூட்டு மூப்பனார் சிதம்பரம் உறவில்விரிசல்

(புதுடில்லி)
தி.மு.க வின் அணியினையும் அதன்ஆட்சியையும் தான் ஆதரிப்பதாக முன்னாள் மத்திய நிதி அமைச்சரும் மூத்த த.மா.கா தலைவருமான ப. சிதம்பரம் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்மாநாடொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய சிதம்பரம் மேலும், தமிழ் நாட்டில் உள்ள இரு அணிகளில் ஜெயலலிதாவின் அ.இ.அ.தி.மு.காவை நான் எதிர்க்கிறேன்.

அப்படி என்றால் தி.மு.கவை ஆதரிப்பதாகத் தான் அர்த்தம் என விளக்கிய சிதம்பரம்,

நான் தி.மு.கவிற்கு ஆதரவு அளிக்கத் தொடங்கியதில் இருந்து எனக்கும் மூப்பனாருக்கும்இடையில் இடைவெளி ஏற்பட்டுள்ளது உண்மை;

கடந்த 1999 ஆம் ஆண்டு நடந்த இடைத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.கவிற்கு த.மா.கா ஆதரவு கொடுப்பதை எதிர்த்தேன். அப்போதிருந்து இவ் இடைவெளி ஏற்பட்டுள்ளது.

அ.இ.அ.தி.மு.க ஆட்சியையும் தி.மு.க ஆட்சியையும் ஒப்பிட்டுப் பாக்கும் போது தி.மு.க ஆட்சி நன்றாக இருக்கிறது என அவர் மேலும் கூறியுள்ளார்;

(உ.9)

## ஊழல் குற்றத்திற்காக

# பதவியில் இருந்து விலகிய முதல்வர் என்ற பெருமை கருணாநிதிக்கு

## கிடைக்குமென ஜெயா ஏளனம்

(புதுடில்லி)
மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் தனது பதவியை இராஜினாமாச் செய்ததன் பின்னணியில் அ இ அ தி.மு.க பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா கடுமையான கண்டனங்கள் அடங்கிய நீண்டதோர் அறிக்கையினை வெளியிட்டுள்ளார்.

மேற்படி அறிக்கையில், இராஜினாமாச் செய்த பாதுகாப்பு அமைச்சர், மற்றும் பிரதமர், தமிழக முதல்வர் ஆகியோரை மிகவும் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களால் சாடியுள்ள ஜெயலலிதா,

இன்டர் நெட் வெப்சைட் ஊடாக அம்பலத்துக்கு வந்துள்ள இவ் ஊழல் விவகாரம் பாரதீய ஜனதாக்கட்சியின் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வர உதவிய அனைவரின் கண்ணினையும் திறந்து விட வேண்டும்.

முன்பு கூறியபடி பாதுகாப்பமைச்சர்ஜோர்ஜ் பெர்னாண்டஸின் கரங்களில் நாட்டின் பாதுகாப்பு பத்திரமாக இல்லை. அதனால் அவரின் இராஜினாமாவை இரண்டாண்டுகளுக்கு முன்பேகோரியுள்ளேன்.

அத்துடன் பிரதமர் வாஜ்பாயைப் பொறுத்தவரை தற்போது அவரது ஒரே குறிக்கோள் எப்படியேனும் ஆட்சியில் ஒட்டிக் கொண்டிருப்பதாகும்.

இலஞ்ச ஊழல் மிகுந்தவர்களையும், தேசவிரோத சக்திகளையும் அவர் மன்னிக்க முன்வந்துள்ளமையே இதனைப்புலப்படுத்துகிறது.

ஊழல் அரசை ஆட்சியில் அமர்த்தாதீர்கள் என்ற கருணாநிதியின் வசனத்தையே மேற்கோள் காட்டிய ஜெயலலிதா, உண்மையில் கருணாநிதியிடம் தான் ஊழல், நிறைந்துள்ளது. கருணாநிதியின் ஊழல் அவரது மருமகன் மாறனின் ஊழல் எப்போதும் உடனிருக்கும் கூட்டாளி ஆர்க்காடு வீராசாமியின் ஊழல், அவரது மகன் ஸ்ராலினின் ஊழல், அவரது கூட்டணிக் கட்சியான பி.ஜே பியின் பாரிய ஊழல் அவரது ஊழல் நிறைந்த ஆட்சியை உலகிற்குக் காட்டுகிறது.

இந்தியாவில் ஊழல் குற்றச்சாட்டிற்காக பதவியில் இருந்து தூக்கிஎறியப்பட்ட முதலமைச்சர் என்ற பெருமையும் கருணாநிதியைத் தான் சாரும் எனவும் தனது அறிக்கையில் ஏளனம் செய்துள்ளார்.

(உ-9)

## இந்திய அரசு

# சட்டத்தை மீறுகிறது சோனியா குற்றச்சாட்டு

(புதுடில்லி)
ஆயுத பேர ஊழல் விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாது இந்திய அரசு இழுத்தடிக்கிறது எனவும் சட்டத்தை மீறுகின்றதெனவும் காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

மேற்படி ஊழல் தொடர்பான விசாரணைகள் தொடங்கமுன்னரே அமைச்சர்கள் தங்களைக் குற்றமற்றவர்களென அறிக்கை வெளியிடத் தொடங்கி விட்டனர் என காங்கிரஸ் கட்சி தலைவி சோனியாதெரிவித்துள்ளார்.

ஆட்சி நடத்தும் தார்மீக உரிமையை இழந்துவிட்ட அரசு உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(உ-9)

# இரண்டாம் சுற்று உள்ளூராட்சித் தேர்தல்

## இன்று பாகிஸ்தானில்

(இஸ்லாமபாத்)
பாகிஸ்தானில் இன்று இரண்டாம் சுற்று உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ளதாக பாகிஸ்தானிய தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இத்தேர்தலில் ஒருகோடிக்கும் அதிகமான மக்கள் வாக்களிக்கவுள்ளனர்.

ஆயிரத்து 500இற்கும் அதிகமான உள்ளூராட்சி சபைகளை தெரிவு செய்யும் இத்தேர்தலில் 61 ஆயிரம் பேர் போட்டியிடுகின்றனர்.

(உ-9)

# போராளிகள் தாக்கு பொலிஸ் அதிகாரி பலி

(அல்ஜீரியஸ்)
கடந்தசனியன்று அல்ஜீரியன் இஸ்லாமியப் போராளிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் பொலிஸ் அதிகாரி ஒருவரும் அரச சார்புக் குழுவைச் சேர்ந்த பேரும் கொல்லப்பட்டனர்;

பொலிஸ் அதிகாரி ஒருவரை, சுட்டுக்கொன்றதை அடுத்து அப்பகுதிக்கு விரைந்த அரச சார்புக் குழுவைச் சேர்ந்த 6 பேரும தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

(உ-9)

## முக்கிய முடிவுகளை எடுக்க

# புலிகளின் தலைவர்கள் கிழக்கில் ஒன்றுகூடினர்

(லண்டன்)
சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக சில முக்கியமான முடிவுகளை எடுக்கும் வகையில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் கிழக்கு மாகாணத்தில் கூடி பேச்சுகள் நடத்தியிருப்பதாக லண்டன் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

தமது நிலைப்பாடு தொடர்பாக பொதுமக்களிடையே கருத்துக்களைச் சென்றடையச் செய்வது,

யுத்த நிறுத்த அறிவிப்பை பல்வேறு சிரமங்களின் மத்தியில் பேணி வருவது ஆகியவை குறித்தும் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டதாக அறிய முடிகிறது.

(உ)

## 3 கோடி 61 இலட்சம் பேருக்கு

# உலகளாவிய ரீதியில் எய்ட்ஸ் நோய் பாதிப்பு

[அமெரிக்கா]
8இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு எச்.ஐ.வி தொற்று காணப்படுகிறது.

இதில் மூன்றிலொரு பகுதியினருக்கு எய்ட்ஸ் தொற்று ஏற்பட்டுள்ளமைபற்றித்தெரியாது.

வருடாந்தம் அமெரிக்காவில் 40 ஆயிரம் பேருக்கு இந் நோய் புதிதாக தொற்றுகின்றது. 16 ஆயிரம் பேர் வருடாந்தம் இந் நோயால் இறக்கின்றனர்;

உலகளாவிய ரீதியில் மூன்று கோடியே 61 இலட்சம் மக்கள் எய்ட்ஸ் நோயினால் பாதிப்படைந்துள்ளனர்.

(உ-3)

## உலக தரிசன அறிவுப் போட்டி இல - 8

முழுப் பெயர்; ..........................................

முகவரி; ..............................

———————— ..........

பிறந்த திகதி: ————————

போட்டியாளர் கையொப்பம் ————————

பெற்ற புள்ளிகள்: ————————

## அதிபர் தரமுயர்வு

# நேர்முகப் பரீட்சை அடுத்தமாதம் யாழில்

[யாழ்ப்பாணம்]
வடமாகாண அதிபர்கள் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து, தரம்-2, தரம்-3 அதிபர்களை பதவி உயர்த்துவதற்கான நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நேர்முகப் பரீட்சை அடுத்தமாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது.

வடமாகாண அதிபர்கள் சங்கம் இது விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். தவராசா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் தொடர்பு கொண்டு பேசியமை தெரிந்ததே:

[உ]

## மரவேலை, தும்பு

# தொழிற் பயிற்சிக்கு ஆட்களைச் சேர்த்தல்

[யாழ்ப்பாணம்]
மரவேலைப் பயிற்சி நெறி [ஆண்கள்], தும்புத் தொழிற் பயிற்சி [பெண்கள்] ஆகியவற்றுக்குப் பயிற்சியாளர்களைத் தெரிவு செய்து வடக்கு- கிழக்கு மாகாண தொழிற்துறை திணைக்களத்தின் மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள மரவேலைப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன:

மேற்படி பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள விருப்பமுடையோர், சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக வலி தெற்கு பிரதேச செயலக முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும்,

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் சுன்னாகத்தில் உள்ள அரசாங்க இயந்திர சாதன மரவேலைப் பயிற்சிப் பாடசாலைப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ]

எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்றுஅடும்
குறள்

# வலம்புரி

## புத்தர் சிலை!

ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்கள் புனித 'புத்தர் சிலைகளை உடைத்தெறிந்து வருகின்றனர். இது உலகளாவிய பௌத்த மக்களுக்குப் பெரும் வேதனையை அளித்துள்ளது. குறிப்பாக இலங்கை வாழ் பௌத்த மக்கள் கதிகலங்கிப் போயுள்ளனர். தமிழர் இனப்பிரச்சினை விடயத்தில் பல்வேறு கருத்துக்களைக்கூறிதமிழர்களுக்கு வேதனையை உண்டு பண்ணிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா கூட புத்தர் சிலை உடைப்பால் கதிகலங்கியுள்ளார். உடைக்கப்பட்ட புத்தர் சிலையின் சிதைவுகளை யாவது தாருங்கள் என்று பிரதமர் கேட்டதிலிருந்து அவரின் மனோ நிலை வெளிப்பட்டுள்ளது.

திருமலைக்கடலில் பிள்ளையார்சிலையை தூக்கிப் போட்ட போதும், நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் குண்டு போட்ட போதும் அந்தந்த மதம் சார்ந்த மக்கள் எவ்வளவு வேதனை அடைந்திருப்பார்களென்பதை இப்போதாவது சிங்கள பௌத்த பேரினவாதிகள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சைவாலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது ஷெல்லும், விமானக்குண்டும் வீழ்ந்தபோது, தேர்கள் எரிக்கப்பட்டபோது நமக்கென்ன, நம்ம சமயமா என்று பார்த்திருந்த பௌத்த சிங்களவர்களுக்கு தலிபான் ஆட்சியாளர்கள் புத்தர் சிலைகளைத் தகர்க்கப் போவது தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால் எல்லாச் சமயங்களையும், அவை சார்ந்த ஆலயங்களையும் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வு பௌத்த சிங்களவர்களிடம் கொஞ்சமேனும் இருந்திருந்தால், புத்தர் சிலைகளின் உடைவுகளை யாவது தாருங்கள் எனக் கேட்கும் பரிதாபம் ஏற்பட்டிருக்காது என்பதுநிரூபிக்க முடியாத உண்மை.

ஒரு நாட்டிலுள்ள பல்வகைச் சமயங்களையும், ஆலயங்களையும் சம கண் கொண்டு பார்க்கும்பரந்த எண்ணம் ஆட்சியாளர்களிடையே ஏற்படாத வரை மற்றவர்கள் செய்யும் அழிப்பு நடவடிக்கைகளைத் தடுப்பது கடினம். இந்நிலையிலேயே இலங்கை அரசுமுள்ளது.

எனவே இனிமேலாவது இலங்கையில் திட்டமிட்டு அழிக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட இந்து. கிறிஸ்தவ ஆலயங்களை அரசு உடனடியாகப் புனரமைத்து பிராயச் சித்தம் பெறுவது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள் மூலம்

# சிறந்த முறையில் சிறுவர் நலம் பேணமுடியும்

சி. பிரபாகரன்
சிறுவர் உரிமைகள் பயிற்சியாளர் குழு
பருத்தித்துறை

இன்று விந்தைகள் புரியும் விஞ்ஞான உலகில் வளர்முகநாடுகளிலும் சரி ஏனைய நாடுகளிலும் சரி எதிர் காலத்தின் மூலக்குருவான எம் சிறார்களின் நலன் பேணவும், காக்கவும், வளம்படுத்தவும் எத்தனையோ வழி முறைகள், வாய்ப்புகள் இருந்தும் எதனையும் செய்வதற்கு அக்கறை காட்டாத நிலையில் சர்வதேச சமுதாயம் உள்ளது. அத்துடன் இச் சிறார்களின் உரிமைகள் மேம்படுத்தப்படாமல் மதிக்கப்படாமல் மறுக்கப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இருந்தும் சர்வதேச ரீதியில் இயங்கும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ.இ) யுனிசெவ், றெட்பானா இவை போன்ற சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்கள் சிறுவர்கள் நலன்கருதி அரசுடன் இணைந்து பல ஆக்கபூர்வமான செயல் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருவது நாம் அறிந்ததே.

### சிறுவர் உரிமைகள் சமவாயம்

சற்று முன்னோக்கிப் பார்ப்போமாகில் காலக்கண்ணோட்டத்தில் சிறுவர்கள் நலனைக் கருத்திற் கொண்டு இங்கிலாந்தை சேர்ந்த எக்கிலான்ரின் ஜெப் என்ற பெண்மணி 1923 இல் சிறுவர் உரிமைப் பிரகடனத்தினை வரைந்தார். இச்சிறுவர்கள் உரிமைகள் சமவாயம் ஐ.நா. பொதுச் சபையினரால் 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 2 ஆம் திகதி அனைத்துலக சட்டமாக நடைமுறைக்கு வந்தது. இதனடிப்படையில் இலங்கையில் 1990 ஆம் ஆண்டு தை 26 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டது பின்பு 1991 ஆம் ஆண்டு ஆவணி 11 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது.

இச்சிறுவர்கள் உரிமைகள் சமவாய நிகழ்ச்சித் திட்டம் நடைமுறையின் படி இலங்கையில் பின்வரும் முறைகளில் இக்குழுக்கள் அமைக்கப்பட்டன:

★ தேசிய கண்காணிப்பு குழு தலைமை மாண்புமிகு ஜனாதிபதி.

★ மாகாண கண்காணிப்பு குழு தலைமை மாகாணச் செயலாளர்.

★ மாவட்டக்கண்காணிப்பு குழு தலைமை அரசாங்க அதிபர்.

★ பிரதேச கண்காணிப்பு குழு தலைமை பிரதேச செயலாளர்.

★ கிராமிய கண்காணிப்பு குழு தலைமை கிராம சேவகர்.

இக்குழுக்கள் துரிதமாகச் செயற்பட்டு செயற் திட்டங்களை வகுத்து சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தி வருகின்றமை கண்கூடு.

### கிராம மட்ட சிறுவர் குழு

இக்குழு தான் குழுக்களின் மிகமுக்கிய பங்கு வகிக்கின்றது. இக்குழுவில் உள்ள அங்கத்தவர்கள் சேவை மனப்பான்மையுடன் தூய சிந்தனையுடன் செயலாற்ற வேண்டிய கடமைகள் அதிகமுண்டு இவர்களால் தான் கிராம மட்டத்தில் உள்ள சிறுவர்கள் பிரச்சினைகள் அடையாளம் காண முடியும். இக்குழுவின் அங்கத்தவர்களின் 40% சிறுவர்களாக இருக்க வேண்டும். குழுவில் சிறுவர்களும் இடம் பெறுவதால் அவர்களும் சுதந்திரமாக தம் எண்ணக் கருக்களை முன்வைக்க முடியும். பெரியவர்கள் கூறுபவற்றைக் கேட்டு சுயமாக சிந்தித்து செயலில் இறங்குவார்கள். மேலும் இக்குழுவில் அக்கிராம உத்தியோகத்தர் தலைமையில் பாலர் பாடசாலை ஆசிரியர், அதிபர், ஆசிரியர். மதகுரு, கிராம மட்ட நிறுவன தலைவர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமாதான நீதிபதி மற்றும் நலன்விரும்பிகள், அங்கத்தவராக இருப்பார்கள் இவர்கள் கிராம மட்டத்தில் செல்வாக்கு மரியாதையும், நன்மதிப்பும் பெற்றவர்கள். இவர்கள் மக்களோடு மக்களாகப் பழகி சிறுவர் உரிமைகளை வழங்க முடியும்.

### செயற்பாடுகள்

★ சிறுவர் பிரச்சினைகளை அடையாளம் காணுதல், நிலைமையைப் பகுப்பாய்வு செய்தல். உதாரணம்;- பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகளை இனங்கண்டு அவற்றின் காரணங்களை அறிந்து பெற்றோருடன் கலந்துரையாடி பிள்ளைகளை பாடசாலை போவதற்கு வழி சமைத்தல்.

★ சிறுவர்கள் நிலைமை பற்றி கிராமத்தவர் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல் உதாரணம்:- வேலைக்குப் போகும் சிறுவர்கள், பாகுபாடு காட்டப்படும் சிறார்கள், ஊனமுற்ற சிறுவர்கள், அடிமைப்படுத்தப்படும் சிறுவர்கள், பெற்றோரைப் பிரிந்த சிறுவர்கள் போன்றவை பற்றி கவனத்தில் எடுத்து அவற்றின் பின் விளைவுகளை அவற்றின் உளத்தாக்கங்களை இலகுவாக எடுத்துரைத்து புத்துணர்ச்சியைத் தூண்டுதல். கிராம கலைநிகழ்ச்சிகள் மூலம் வெளிப்படுத்த முடியும்.

★ பிள்ளைகள் சம்பந்தமான பிரச்சினைகள் நிகழ்வுகள் தீர்ப்பது சம்பந்தமான திட்டங்களை வகுத்தல்.

உதாரணம்:- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாத பிள்ளைகள், வறுமையிலும் வறுமையால் பாடசாலை செல்லாத பிள்ளைகள், போசாக்கு குறைவான பிள்ளைகள் பெற்றோரை பிரிந்து உறவினர்களால் துன்பப் படும் பிள்ளைகள் இவற்றிற்கு கிராம உத்தியோகத்தர் உதவியுடன் செயற்பாடுகளை வகுத்து நடைமுறைப் படுத்தி கண்காணித்தல். பெற்றோரை பிரிந்த பிள்ளையை சிறுவர் காப்பகத்தில் சேர்க்கலாம்.

★ பிள்ளைகள் சம்பந்தமான மேலதிக அனுசரணை தேவையெனின் பிரதேச மட்டக் குழுவிற்கு அறிவித்தல்.

உதாரணம்-: கடுமையான நோய் உள்ள பிள்ளைக்கு மேலதிக வைத்திய வசதிகள் பண உதவிகள் தேவைப்படலாம். கண்பார்வை குறைந்த பிள்ளைக்கு லயன்ஸ்கிளப்பில் உதவியைப் பெறமுடியும்.

★ நடவடிக்கைகள் பற்றி பிரதேச மட்டக் குழுவிற்கு கிரமமாக பின்னூட்டல் செய்தல் உதாரணம:-சிறார்கட்கு அவர்கள் உரிமைகள் சம்பந்தமாக செய்தவைகள் மிக அவசியமாக செய்ய வேண்டியவை பற்றி எழுத்து மூலம் கொடுத்து ஆலோசனை பெறல்.

★ சிறுவர் உரிமைகள் பற்றி விழிப்புணர்வை தாய் தந்தையர்கட்கு கிராமத்தவர்கட்கு ஏற்படுத்துவதுடன் அவர்கள் உரிமைகள் பற்றி அடிப்படைக் கொள்கைகளை பின்பற்றுகிறார்களா என்பதை உறுதி செய்வதற்கு தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

உதாரணம்:- பெற்றோர்களைச்சந்தித்தல், கருத்தரங்குகள், கலைநிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல் பிரதேச செயலர் குழு உறுப்பினர்களுக்கும்அழைப்பு,கொடுத்து கிராம மக்களுடன் தொடர்பாற்றலை ஏற்படுத்தல்:

★ சிறுவர்களின் அபிவிருத்திக்கான திட்டங்களை மேற்கொள்ளல்.

உதாரணம்:- வசதிபடைத்தோர் நலன்விரும்பிகள் கிராம முன்னேற்ற சங்கம் சனசமூக நிலையம் மாதர் முன்னேற்றச் சங்கம் இவர்களுடன் பிரதேச மட்டக்குழு அனுசரணையுடன்போசாக்கு நிலையம் அமைக்கலாம் வயது வந்தும் பாடசாலை செல்லாத சிறார்களுக்கும் மெல்ல கற்போருக்கும் சனசமூக நிலையம் மேலதிக வகுப்புக்களை படித்த இளைஞர்கள் மூலம் நடாத்துதல். இலகு தமிழில் சிறுவர் பிரசுரங்களை சிறுவர்கள் மூலம் கையெழுத்து பிரதிகளை வெளியிடுதல்.

### பயிற்சி பெற்றவர்கள்

இப்படியான பல செயற்பாடுகள், இக்கிராமிய சிறுவர் குழுவிற்கு உண்டு இவைகளைத் திறம்பட செய்யும் முகமாக மேலதிக சேவைகளும் வகுக்கப்பட்டுள்ளது. அதாவது ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் சமூக நோக்கு சமூக நற்சிந்தனை திட்டமிட்டு செயலாற்றக் கூடிய திறமை சிறந்த மக்கள் தொடர்பாற்றல் மற்றும் திறமைகளை வெளிப்படுத்தக் கூடிய இரண்டு அல்லதுமூன்று அங்கத்தவர்கள் பிரதேசசெயலர் மூலம் தெரிவு செய்யப்பட்டு சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினால் சிறுவர் உரிமைகள் சமவாயப் பயிற்சிகள் உபகரண செய்முறைகள் மக்கள் தொடர்பாடல் போன்றபல விடயங்கள் பற்றி அவர்கட்கு பயிற்றப்பட்டு இருக்கின்றது. இவர்கள் பிரதேச ரீதியில் சிறப்பாகச்செயலாற்றிமக்கள் மத்தியில் ஓரளவேனும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வரவேற்பும் பெற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும் இத்துடன் உங்கள் கிராமிய குழு அமர்வுகட்கும் வருகை தர முடியும். இவர்கள் மூலம் ஆலோசனைகள்,பயிற்சிநெறிகள கருத்தரங்குகள் போன்ற பயனுள்ள அம்சங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே ஒவ்வொருகிராமிய அபிவிருத்திக்குழுக்களும் சிறப்பாக முன்னுதாரணத்துடன் செயற்படுவது அவசியத்திலும் அவசியமாகும் இப்படி செயற்படும் பட்சத்தில் சில தீர்க்க முடியாதபிரச்சினைகள் படிப்படியாக செயல் முறைகள் பரிந்துரைகள் மூலம ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்து சுலபமாக தீர்க்க முடியும். இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். அவர்கள் வாழ்விலே தான் வரலாறே தங்கியுள்ளது.

### கல்வி மேன்மை

'கண்ணுடையார் என்பவர் கற்றார் முகந்திரண்டு புண்ணுடையவர் கல்லாதவர்' என்பது வள்ளுவப் பெருந்தகையின் அருள்வாக்கு. கல்லாதவர் முகத்திலுள்ள கண் கண்ணல்ல அது புண் என வள்ளுவர் கூறுகின்றார். ஆகவே எதிர்காலத்தில் கல்வி கற்ற ஓர் சமுதாயத்தை உருவாக்க சிறுவர் செயல்திட்டங்களை கிராமங்களில்விதைத்து நற்பிரஜைகளை அறுவடை செய்ய வேண்டுமென்பதே எமது வேணவாவாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தாயும் பெரிதுவக்கும் வகையில் ஒவ்வொருவரும்சான்றோர்களாக வளர வேண்டும். ஆபிரகாம் லிங்கனிடம் மிருந்த தன்னம்பிக்கையும் வரும்விடாமுயற்சியும் தான் இவரை பிற்காலத்தில் ஓர் வல்லரசின் தலைவராக உருவாக்கியது என்றால் மிகையாகாது.

### புள்ளி விபரத் தொகுப்பு

எனவே ஒவ்வொரு கிராம மட்டக் குழுக்களும் விழிப்புணர்வோடும், தூய சிந்தனையோடும் சீரிய நோக்குடன் உண்மைக்காகவும் சிறுவர் உயர்வுக்காகவும் உழைத்து தாமும் உயர்ந்து கிராமத்தையும் உயர்த்தி தாய் நாட்டையும் வளம்படுத்த வேண்டும். எல்லாவற்றிலும் மேலக இந்நிகழ்ச்சித்திட்டவழிமுறைகள் கிராம ரீதியாக கண்காணிப்பது மிக மிக அவசிய

→ 2ஆம் பக்கம் பார்க்க

## தவக்காலச் சிந்தனை - 22



பழைய ஏற்பாட்டிலே இறைவன் இஸ்ராயேலருக்கு கொடுத்த சட்டங்களை இரு பிரிவாக்கினால் 1- செய்யக் கூடியவை 2-செய்யத்தகாதவை என்பதாகும். இயேசுக்கிறிஸ்து இவ்வுலகில் போதிக்கையில் கொடுத்த சட்டம் ஒன்றே ஒன்று தான். அதுவே ''அன்பு'' அன்பால் உலகை உருவாக்க வந்தேன் என்றார் இயேசு. அன்புக்காக ஏங்கும் நெஞ்சங்கள் ஆயிரமாயிரம் உண்டு. பெற்ற குழந்தைகளால் வெறுத்து ஒதுக்கப்பட்டு வயதான காலங்களில் கேட்பாரற்ற நிலையில் வானத்தையும் பூமியையும் நோக்கும் வயதான வாடிப்போன கண்களைக் கொண்ட முதியோர் இல்லம் ஏங்கும் அன்புக்கோர் சான்று. அன்பு என்ற உடனே அது கடவுளின் சொத்து என்று அன்பையும் கடவுளையும் தொடர்புபடுத்தும் நாம் நமது வாழ்க்கைக்கும் அன்புக்கும் உள்ள தொடர்பை நோக்குதல் வேண்டும். அன்பைப் பற்றிப் போதித்த இயேசு சிலுவையில் மரித்து அன்பை வெளிப்படுத்தினர். அவரைப் பின்பற்றும் நாம் அவரைப் போல் வாழ முற்படுவோம்.

காவலன்

மங்கையர் மனம் மயங்கும்
மங்காத அசல் 22கரட்
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
அதுதான்
**மகாநதி**
**ஜுவல்லறி**
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1617)

# அரசு-புலிகள் சமாதான பேச்சிற்கு புளொட் அமைப்பு ஆதரவு வழங்கும்

## தேசிய மகாநாட்டில் தீர்மானம்

நோர்வே அரசின் அனுசரணையுடன்புலிகளும் அரசும் மேற்கொள்ளவிருக்கின்றசமாதான பேச்சுவார்த்தைகளுக்கு தமது பூரண ஆதரவை தொடர்ந்தும் வழங்குவது என்று வவுனியாவில் கூடிய தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தேசிய மகா நாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 18ம் திகதி முதல் நேற்று வரைஇந்த மகாநாடு வவுனியாவில் நடைபெற்றது: இம்மகாநாட்டில் தர்மலிங்கம் சித்தார்த்தன்2வதுமுறையாகவும் கழகத்தின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்;

இம் மகாநாட்டில் எடுக்கப்பட்ட ஒன்றிணைந்த தீர்மானங்கள்வருமாறு,

★கடந்த மூன்று தசாப்தங்களுக்குமேலாகநடந்துகொண்டிருக்கும் தமிழ்மக்களின் போராட்டத்திற்கு இறுதித் தீர்வாகவடக்குகிழக்குஇணைந்த தமிழர் தாயகத்துக்கு சமஷ்டி அமைப்பு வழங்கப்பட வேண்டும்;

★வவுனியாவில் நிலவுகிற எரிபொருள் ,வதிவிடகட்டுப்பாடுகள், குடாநாடு. மட்டக்களப்பு பிரதேசங்களில்நிலவும் போக்குவரத்துக்கஸ்டங்கள், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் ஏற்பட்டிருக்கும், உணவு, எரிபொருள்விவசாய உற்பத்திப்பொருட்களுக்கான தட்டுப்பாடுகளை போக்குவதற்கு அரசியல் போராட்டங்களை நடாத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. [ம]

அழகிற்கு அழகூட்டும்
தங்க நகைகளை
உடனுக்குடன் செய்து
தருபவர்கள்
**நியூ**
**ராதிகாஸ்**
**நகை மாளிகை**
**189. கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**
(கி/ 1605)

## திக்கம் வடிசாலை ஊழியர்களுக்கு அழைப்பு

திக்கம் வடி சாலையில் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களும் இன்று கடமைக்கு சமூகமளிக்க வேண்டும் என்று வடிசாலைப் பொது முகாமையாளர் ப.ரவீந்திரன் கேட்டுள்ளார்;

அரச சேவைக்குள் வடிசாலை ஊழியர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதால்,அனைத்து ஊழியர்களும் இன்று கடமைக்கு சமூகமளிக்கவேண்டுமென்று அவர் கேட்டுள்ளார். இ-23]

### எந்தவித-

சேர்ந்த மேற்படி சிங்கள விவசாயிகள் புலிகள் தம்மைத் தடுத்து வைத்திருந்த காலத்தில் நல்ல வகையில் பராமரித்தனர் எனத் தெரிவித்தனர், அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

1999ம் ஆண்டு டிசெம்பர் 5ந் திகதி புலிகளால் கைது செய்யப்பட்ட நாம் பல்வேறு முகாம்களில் மாற்றி மாற்றி தங்கவைக்கப்பட்டோம். புலி உறுப்பினர்கள் எம்மை அடிக்கடி வந்து பார்வையிட்டு எமக்கு எந்தவித குறையுமின்றிப் பராமரித்தனர்.

விடுதலைப்புலிகளின் தலைவர்கள் அடிக்கடி எமதுகுறைகளை கேட்டறிந்ததுடன் எமது கருத்துக்களையும் கேட்டறிந்தனர். அவர்களில் ஒருவர் எம்மோடு நன்றாக சிங்கள மொழியில் உரையாடியதுடன், அவர் தான் ஒரு சிங்களப்பெண்மணியையே திருமணம் செய்துள்ளதாகவும் தெரிவித்தாரென அவர்கள் மேலும் தெரிவித்தனர். (இ)

### குடுமபநல

பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்;

யாழ் நீதவான் இ.த விக்கினராஜா மேற்கொண்ட சமாதான முயற்சியின்போது மாநகரசபை நிர்வாகத்திற்கும், சுகாதாரப் பகுதிக்குமிடையே எழுந்துள்ள சிக்கல் நிலைமைகளை மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநகரசபைப்பிரதிநிதிகளே தீர்த்துவைக்கவேண்டும் என நீதவான் கூறினார்

முன்னர் கடமையாற்றிய ஆணையாளர்மக்கள்பிரதிநிதிகள் இல்லாத படியால் அவருக்கு விசேட அதிகாரங்கள் இருந்தது எனக் குறிப்பிட்ட நீதவான் தற்போது எழுந்துள்ள பிரச்சினைக்கு முடிவு காணும் வரை வைத்திய கலாநிதி தெய்வேந்திரனைகடமையாற்றுமாறு கேட்டுக்கொண்டார்:இதுஇவ்வாறிருக்கயாழ் மேயர் ரவிராஜ் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வரை சுகாதார ஊழியர்களை கடமையாற்ற விட வேண்டும் என்றும் மேயர் யாழ் வந்ததும் இது தொடர்பாக ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்றும் நீதவான் இ.த விக்கினராஜா ஆணையாளரிடம்தெரிவித்துள்ளார்.

### யாழ் - -

டுள்ள தடைகளை நீக்க வேண்டுமென்று எம் பிக்கள் கோரியிருந்தனர்.

யாழ்.குடாநாட்டிலுள்ள மீனவர்கள் தம்மைச் சுதந்திரமாக மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர்.

மீன் பிடிப்பதிலுள்ள பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு விரைவில் உயர் பாதுகாப்பு மாநாடு நடத்தப்பட உள்ளதாகவும் இன்று நடைபெறவிருக்கும் பாதுகாப்பு அமைச்சின் உயர் மாநாட்டிலும் இதுகுறித்து நல்லதொரு முடிவு எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### இணுவில் - -

பகரமாக உயிரிழந்துள்ளார்.

டயானா சந்திரசேகரம் ஜெயராஜா [வயது 13]என்ற பிரஸ்தாப சிறுமியே நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தவராவர். [இ]

## விளையாட்டு போட்டி

யாழ் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, இன்று பி.ப 1 30 மணிககு வித்தியாலய அதிபர் வ.ம.எட்வேட் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ இராஜகோபால் பிரதம விருந்தினராகவும்,குருநகர்பங்குத் தந்தை அருட் திரு வீ எவ் பொனிபஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். [இ

### பிரபுக்கள்

தினம் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை பிரித்தானிய பொது மக்கள் சபையில் இந்தப் பிரேரணை 296 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

### ஆப்கான் - -

மாச்மாதம் 16ந்திகதிவெளியான 2346ம் வெளியீட்டிலேயே புத்தர்சிலை உடைக்கப்பட்டதை ஆதரித்துகட்டுரை எழுதப்பட்டுள்ளது?

இதேவேளை தமிழ்சேக்கிள்ஸ் அமைப்பு புலிகளுடன் தொடர்புடையதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## 6.பிர. செயலர்கள் கைதாகலாம்?

புலிகளின் முகாமொன்றில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் இவ் ஆறு பிரதேச செயலர்களும் பங்குபற்றியதற்காக இவர்கள் கைது செய்யப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது. (ந)

### சமாதானம் - - -

வடக்கில்சயனைட் வில்லைகளைக்கட்டிக்கொண்டு போராடும் ஆண்களும் பெண்களும் இலங்கையர்கள்தானே எனவே இனவாதத்தை தூண்டாமல் இனப்பிரச்சினைக்கு நியாயமானதீர்வு காண நாம்அனைவரும்ஒன்றுபடவேண்டுமென்றும் அவர் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார். (இ)

### கச்சதீவு - -

இவ்வனுமதிகளை அடுத்தே இம்மாதம் 25ந் திகதி கச்சதீவில் இடம் பெறவுள்ள திருவிழாவுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையினர்செல்லமுடியுமென என் மதனராஜா தெரிவித்தார்.

கச்சதீவுக்கு செல்வது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா நடவடிக்கையெடுத்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தேர்தல் முடிவுகள்

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் 2001ம் ஆண்டு தேர்தலில் என்றும் இல்லாதவாறு தேர்தல் பரபரப்பாக நடைபெற்றது: தேர்தலில் பங்குபற்றிய குழுவினரில் ஒரு சாரார் என்றும் இல்லாத அளவிற்கு விளம்பரங்களும், பிரச்சாரங்களும் ஆதரவும் வேண்டி நின்றனர். மறுசாரார் எதுவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் இருந்த இடத்திலேயே எதுவித பிரச்சாரமும் மேற்கொள்ளாமல் அமோக வெற்றி பெற்றனர். பிரச்சாரம் செய்தோர் தோல்வியைத் தழுவினர். ஒரேநபர் தொடர்ந்து நான்கு முறை மாவட்ட தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டு நான்கு முறையும் நிராகரிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மாவட்டத் தலைவர்:-** திரு. சி. சுந்தரலிங்கம்
பெற்ற வாக்கு 49 (லிங்கம் பேக்கரி)
திரு. மரியரட்ணம்
பெற்ற வாக்கு 30 (றொலெக்ஸ் பேக்கரி)

**மாவட்டஉபதலைவர்:-** திரு. அ. கந்தையா
போட்டியின்றி தெரிவு (கண்ணியம் பேக்கரி)

**மாவட்ட செயலாளர்:-** திரு. கு காந்தரெட்ணம்
பெற்ற வாக்கு 49(ஜெயக்குமரன் பேக்கரி)
திரு. ப. அஞ்சலோ
பெற்ற வாக்கு 30 (வசந்தா பேக்கரி)

**மாவட்ட உபசெயலாளர்:-** திரு. இ. கும்ாரசாமி
பெற்ற வாக்கு 49 (சுவர்ணா பேக்கரி)
திரு. செ. வசந்தரூபன்
பெற்ற வாக்கு 30 (ரட்ணா பேக்கரி)

**மாவட்டப் பரிசோதகர்:-** திரு. இ. அமரசேனாபதி
பெற்ற வாக்கு 41 (சீவரட்ணம் பேக்கரி)
திரு. அ. துரைசிங்கம்
பெற்ற வாக்கு 29 (துர்க்கா பேக்கரி)

நிர்வாகம்
யா/மா/பே/உ/சங்கம்

317, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
[கி/1626]

**யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம், இலங்கை**
**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

## அறிவித்தல்

**செய்முறைப் பரீட்சை நாடகமும் அரங்கியலும் கலைமாணிபகுதிII 1999 (வெளிவாரி)**

மேற்படி செய்முறைப் பரீட்சை தொடர்பாக பரீட்சார்த்திகள் 28.03.2001 அன்று பி.ப 3 00 மணிக்கு தலைவர் [நுண்கலைத்துறையாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,திருநெல்வேலி] அவர்களை சந்திக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்
(கி/1620]

## தகவல் தொழில்நுட்பப் பூங்கா

(272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)
தொலைபேசி இல: 021 - 3641

தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் இடைவரவு விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கீழ் வரும் கற்கை நெறிகளுக்கு விரிவுரையாற்றக் கூடிய தகுதியும் அனுபவத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

1. Ms-Office
2. Visual Basic
3. Java
4. Pagemaker
5. Auto CAD
6. nternet- & E-Mail
7. Corel Draw
8. Computer Hardware
9. C,C + +
10. Computer Network
11. IT
12. Software Engineering

**விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 26.03.2001 (திங்கட்கிழமை)க்கு முன்னதாக நிறுவனத்திற்கு கிடைக்கக் கூடியவகையில் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைக்கவும்.**

### நேர்முகப் பரீட்சை:

27-03-2001
28-03-2001 } காலை 10.00 மணிக்கு

### குறிப்பு:-

விண்ணப்பித்தோர் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும். ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் நேரில் சமுகம் தரவும்-

**DIRECTOR**
**IT Park**

(கி- 625)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மார்ச் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;